குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.95/2019

அ.சா.4

2024–ம் ஆண்டு நவம்பர் 14–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமாயி | ஜாதி | |
| கணவர் பெயர் | சேட்டு | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.06 மணி,

Accused A1.Kaliya Moorthi and A2.Ramasami Present. Advocate Mr.A.Nagendiran present for A1 and for Advocate Mr.Kannan for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் தாரமங்கலத்தில் குடியிருந்து, பூக்கடை வைத்துள்ளேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். வழக்கு சம்பவத்தின்போது, அவர்கள் இருவரும் எனக்கு சொந்தமான வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வந்தார்கள். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு, இரவு 01.00 மணியளவில், அ.சா.2 ரமேஷ் வேலைக்கு சென்றுவிட்டிருந்த சமயத்தில், காவியா வீட்டில் இருந்தபோது, யாரோ அவர் வீட்டுக் கதவை தட்டி காவியா கதவை திறந்தபோது, காவியாவின் கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் செயினை ஒரு நபர் பறித்துக் கொண்டு சென்று விட்டதாக காவியா எங்களிடம் வந்து இரவு 01.00 மணியளவில் சொன்னார். நாங்கள் ஓடிச்சென்று பார்த்தபோது, செயினை பறித்த ஆட்கள் இல்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**2**. இவ்வழக்கு தொடர்பாக, ஒருநாள் விடியற்காலை 05.00 மணியளவில் போலிசார் என்னை விசாரித்தனர். தேதி எனக்கு நினைவில் இல்லை. அ.சா.1–டம் இருந்து பறிக்கப்பட்டதாக சொல்லப்படும் செயினின் வகை மற்றும் எடை எனக்கு

தெரியாது என்றால், அது 5 பவுன் தாலி செயின் ஆகும். அதன் வடிவம் எனக்கு தெரியவில்லை. அ.சா.1–டம் இருந்து நகையை பறித்து சென்றதாக சொல்லப்படும் நபர்கள் எந்த திசை நோக்கி எந்த தெருவில் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தன்று காலை 06.00 மணிக்கு பூ கட்ட சென்று, காலை 10.00 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். அ.சா.1 எனது வீட்டில் குடியிருப்பதால் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் இவ்வழக்கு சம்பவம் குறித்து என்னிடம் எழுதி வாங்கினார்கள். நான் சொல்லச்சொல்ல எழுதினார்கள். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.12 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.